# புதிய நம்பிக்கை

குறிப்புச் சட்டகம்

முன்னுரை

நொறுங்கியது மேரியின் மனம்

முதல் புறக்கணிப்பை முதலில் புறக்கணி

முயன்றால் முடியாதது உண்டோ?

முடிவுரை

## முன்னுரை:

ஒவ்வொரு நாளும் காலை ஐந்து மணிக்கு மேரியின் குடும்பம் விழித்துக் கொள்ளும். அவர்களுக்குப் பகல் முழுவதும் பருத்திக் காட்டில் வேலைகள் இருக்கும். ஒரு நாளில் ஒரே ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கி விடக் கூடாது என்று நினைக்கும் குடும்பம் அது. பருத்திக் காட்டில் இருந்து பகலில் மேரியின் தாய் பாட்ஸி மட்டும் வீட்டிற்குத் திரும்புவாள், தனது குடும்பத்தினருக்கு உணவு சமைக்க. உணவு தயாரானதும் “பசியார வாங்க செல்வங்களே” என்று ஓங்கிக் கூப்பிடுவார். வீட்டு வாசலிலிருந்து ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு உயரமுமாக இருந்த அந்தக் குடும்பத்தார் வயல் வெளியிலிருந்து வியர்வை சொட்டச் சொட்ட வீட்டினுள் நுழைவர்.

## நொறுங்கியது மேரியின் மனம் :

மேரி தன் தாயாருடன், துவைத்துத் தேய்த்து வைத்திருந்த துணிகளைத் தூக்கிக்கொண்டு, பென் வில்ஸனுடைய மாளிகைக்குச் சென்றாள். அந்த வீட்டினுள் பின்புறமாக நுழைந்த மேரி அந்த மேசையில் இருந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள். அதைக் கண்ட வில்ஸனின் இரு பெண் குழந்தைகளுள் சிறுமியாக இருந்தவள் “புத்தகத்தை என்னிடம் கொடு! நீ இதை எடுக்கக் கூடாது! உன்னால் படிக்க முடியாது...!” என்று மேரியிடமிருந்து புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள். அச்செயலினால் மேரியின் மனம் உடைந்தது. கண்ணீர் கண்களில் முட்டியது.

## முதல் புறக்கணிப்பை முதலில் புறக்கணி :

நாம் எங்கு முதலில் புறக்கணிக்கப்பட்டோமோ அதை முதலில் புறக்கணிக்க வேண்டும். மேரியை முதலில் புறக்கணித்த அந்தச் சிறுமியின் செயலை மேரி முதலில் புறக்கணித்தாள். அந்தச் செயல் அவள் நெஞ்சில் ஆணியாய் தைத்தது. தன் உள்ளத்தில் அவள் அடிக்கடிச் சொல்லிக் கொண்ட வார்த்தை ‘நான் படிக்க வேண்டும். நான் படிக்க வேண்டும்” என்று, அவ்வார்த்தையை தினமும் அசைபோட்டாள்.

முயன்றால் முடியாதது உண்டோ?:

அவளது ஆசை மிஸ் வில்ஸன் மூலமாக நிறைவேறும் நாளும் வந்தது. அவர் மூலமாக பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தாள். அவள் நெஞ்சில் குத்திய வார்த்தை நெருப்பாய் மாறியதால் அவள் நன்றாகப் படித்தாள். தன் சமூகத்தில் படித்த முதல் பெண் என்ற புகழையும் கொடுத்தது. அவ்வார்த்தைகளால் அவள் சோர்ந்து போய் இருந்தால் அவளால் அந்தச் சமூகத்தில் உயர்ந்திருக்க முடியாது. அவள் எடுத்த முயற்சிக்கும் ஆசிரியர் கொடுத்த பயிற்சிக்கும் நல்ல பலன் கிடைத்தது. உயர்கல்வியைத் தொடரவும் வாய்ப்பு கிடைத்தது. சமூகத்தில் தனக்கென தனி முத்திரையையும் பதிக்க முடிந்தது. வரலாற்றிலும் இடம் கிடைத்தது. வெற்றி என்பது நம் கைக்குக் கிடைக்கும் எளிய கனியல்ல; அது ஓர் எட்டாத கனி. அதை நாம் தான் தட்டிப் பறிக்க வேண்டும். மேரியும் தட்டிப் பறித்தார். ஊர்மக்கள் மனதிலும் உலக மக்கள் நினைவிலும் இடம் பிடித்தாள்.

முடிவுரை :

மேரியின் இச்செயல் நம் அனைவருக்கும் நல்ல ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. நாம் எதைப் பற்றிக் கனவு காண்கிறோமோ அப்படியாகவே மாறி விடுகின்றோம். உழைப்பிற்கு எப்பொழுதுமே ஊதியம் உண்டு.